## தெவிநுவர பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 25 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து தெவிநுவர பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டின் போது உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் தவணைப் பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 168,275 தொகை மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 40,814 தொகை பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சொத்துக்களை சரியாக மூலதனப்படுத்த வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டு தொடர்பாக முன்னைய ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 120,000 இற்கான கட்டிட வாடகை வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 4,569,458 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடன்கொடுத் தோர்களை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவ டிக்கை எடுப்பேன். |
| (v) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாணவேலை கடன்பட்டோர் ரூபா 3,537,482 தொகை மிகையாக கணக்கீடு செய்யப் பட்டிருந்தது. | கடன்பட்டோர் களை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவ டிக்கை எடுப்பேன். |
| (vi) | மீளாய்வாண்டிற்கான எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டங்களின் சிட்டையிடல் ரூபா 798,030 தொகை எனினும், அவை ரூபா 760,056 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவ டிக்கை எடுப்பேன். |
| (vii) | முன்னைய ஆண்டு ஏலவிற்பனையின் போது அகற்றியிருந்த நிலையான சொத்துக்களின் கிரயத்தை அறுதியாக இனங்காணாமல் முன்வந்து முன்செல்லல் (FIFO) முறையின் படி ரூபா 762,310 தொகை கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவ டிக்கை எடுப்பேன். |
| (viii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 307,057 இற்கான பலவின வருமானத்தினை கணக்கீடு செய்திருக்க வில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவ டிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 81,040,613 தொகைக்கான 06 கணக்கு விடயங்கள் உரிய மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 40,840,231 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதி களில் வித்தி யாசங்கள் இணக்கஞ் செய்து கணக் குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீதிகளின் வித்தியாசத் திற்கான காரணங்களை கண்டறிந்து அடுத்த வருடம் இறுதிக் கணக்கு கள் சமர்ப்பிக்கும் போது அட்டவணைகளுடன் சமர்ப்பிப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 220,862,959 தொகைக்கான 12 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கின்றேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 17 | அனைத்து அடியிதழ் புத்தகங்களையும் உட்படுத்தி பதிவேடு ஒன்று பேணப்பட்டு வர வேண்டும். எனினும் சபையினால் சில அடியிதழ் புத்தகங்கள் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) விதி 59 | அனைத்து ஆண்டுகளின் ஆரம்பத்திலும் கைத்தொழில்கள் மீதான அட்டவணை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) விதி 61 | கைத்தொழில் வரி தொடர்பான பதிவேடு ஒன்று பீ.எஸ்.26 படிவத்தின் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (iv) விதி 143 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு பேரேடு மாதாந்தம் சமநிலைப்படுத்தி கூட்டுத் தொகை பிரதான பேரேட்டுக் கணக்குடன் சீராக்கல் செய்யப் பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |
| | (v) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவு களுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்கு களுடன் சமர்ப்பித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |
| | (vi) விதி 217 மற்றும் 218 | சபைக்குச் சொந்தமான அனைத்துக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான விபரங் களை உட்படுத்தி பீ.எஸ்.46 இலக்கம் கொண்ட படிவத்தில் பதிவேடு ஒன்று பேணப்பட்டி ருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிதல் பரிசோதனைகள் மேற்கொள்ள ப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 27,603,602 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 26,179,646 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,259,839 | 5,662,880 | 5,957,833 | 3,867,108 | 3,357,100 | 5,717,385 | 5,542,817 | 4,162,061 |
| வாடகை | 20,013,272 | 22,551,481 | 23,094,744 | 9,163,348 | 27,965,850 | 21,354,382 | 21,354,382 | 9,706,611 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 3,949,486 | 860,113 | 860,113 | -- | 3,059,900 | 529,864 | 529,864 | -- |
| ஏனைய வருமானங்கள் | 21,188,620 | 65,059,111 | 52,844,873 | 66,140,638 | 17,267,000 | 17,937,843 | 17,937,843 | 53,926,400 |
| மொத்தம் | 47,411,217 | 94,133,585 | 82,757,563 | 79,171,094 | 51,649,850 | 45,539,474 | 45,364,906 | 67,795,072 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 47,411,217 தொகையாகும். மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 67,795,072 இற்கான நிலுவைத் தொகை மற்றும் சிட்டையிடல் ரூபா 94,133,585 தொகையுடன் ரூபா 161,928,657 அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 82,757,563 தொகையாகக் காணப்பட்டமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 79,171,094 ஆகக் காணப்பட்டது. அறவீடுகளின் முன்னேற்றம் 51 சதவீதமாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையை அறவீடு செய்யும் முன்னேற்றத்தை அதிகரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டிற்கான ஆரம்ப நிலுவை வீதவரி மீதி ரூபா 4,103,954 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 2,019,116 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் (தண்டத்துடன்) ரூபா 6,123,070 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 2,229,967 தொகை கொண்டிருந்தமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 3,893,103 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான மொத்த அறவீடுகள், சிட்டையிடப்பட்ட மற்றும் வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை மீதியில் 36 சதவீதம் அளவான மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | ஆதனங்களை தடைசெய்யும் அறிவித்தல்களை வினியோகித்து நிலுவை வீதவரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) ஏக்கர் வரி**

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 66,428 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் (கட்டணம் மற்றும் தண்டப்பணமுடன்) ரூபா 6,754 தொகையாகும். ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 16,495 தொகையாகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 56,687 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. மீளாய் வாண்டிற்கான மொத்த அறவீடுகள் சிட்டையிடல் மற்றும் நிலுவை மீதியில் 23 சதவீத அளவான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | ஏக்கர் வரி ஆதனங்கள் தொடர்பாக சபையினால் நியமனம் செய்துள்ள கணிப்பீட் டுக் குழு குறிப்பிட்ட ஆதனங்க ளை இனங்காணும் விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலுவை வாடகை ஆரம்ப மீதி ரூபா 9,706,611 தொகையாகக் காணப்பட்ட துடன், ரூபா 4,431,360 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 14,137,971 தொகை அறவிடப்பட வேண்டியி ருந்தது. மீளாய்வாண்டிற்கான மொத்த அறவீடுகள் ரூபா 4,974,623 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டு இறுதியில் உள்ள வாறு ரூபா 9,163,348 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான மொத்த அறவீடுகள், சிட்டையிடல் மற்றும் நிலுவைத் தொகையில் 35 சதவீதம் அளவில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | ஆண்டிற்கான இறுதி அறிவித்தல் அனுப்பப்பட்டு நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 2,522,847 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 61,988,240 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பணத்தை பெற்றுத் தருமாறு பல தடவைகள் பிரதான செயலாளரின் எழுத்துமூலம் வினவி உள்ளதுடன் எதிர்காலத்தில் விண்ணப்பித்து இந்த பணத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பாய்வு

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 திசெம்பர் 11 ஆந் திகதி சபையினால் நாளாந்தம் சேகரமாகும் குப்பைகளை அகற்றுவதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 2,700,000 தொகை செலவிடப்பட்டு அபரக்க பகுதியில் 04 ஏக்கர் காணி கொள்வனவு செய்திருந்ததுடன் பொது மக்கள் எதிர்ப்பின் காரணமாக அதனை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. மாத்தறை தங்காலை பாதைக்கு அண்மையிலுள்ள தனியார் காணி ஒன்றில் முறைசாரா விதமாக குப்பைகள் அகற்றப்படுவதினால் பக்கத்தில் உள்ள பல்கலைக் கழகத்திற்கு, பாடசாலைக்கு மற்றும் பொது மக்களுக்கு சுற்றாடல் சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. | முறைப்படி குப்பைகள் அகற்றப்பட வேண்டும். | வெல்லமடம குப்பை அகற்றும் இடம் 2019 மே 21 திகதி முதல் உக்கக் கூடிய குப்பைகள் மாத்திரம் போடுவதற்கும் உக்காத குப்பைகளை சேகரித்து வகைப்படுத்தி அகற்றுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்கு களுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபை யினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்கு களை நெருங்கு வதற்கு நிகழ் ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிறுவனத்தின் மூலம் அறுதியாக இனங்காணப் பட்ட நிலைபேறான அபிவிருத்தி சுட்டிகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் நீண்ட காலத்திட்டம் தயாரிக்கின்றேன். |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 29 ஆம் திகதிய 2052 ஆம் இலக்க வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறிவித்தல் பலகை காட்சிப்படுத்தல் தொடர்பாக 2019 மார்ச் 01 திகதி மேற்கொள் ளப்பட்ட வெளிக்கள பரிசோதனை யின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ள 71 அறிவித்தல் பலகைகளுக்காக ரூபா 308,137 இற்கான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அறிவித்தல் பலகைகள் தொடர்பான கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு கட்டணம் அறவீடு செய்வதற்காக அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளதுடன் 2019 ஆண்டிற்கான பதிவேடு ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 திசெம்பர் 29 ஆம் திகதி 2052 இலக்கங் கொண்ட வர்த்தமானியின் பிரகாரம் தொலைபேசிகள், வானொலிகள், தொலைக்காட்சி ஆகியவற்றின் செலுத்துகை டவர்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் பெற்றிருக்க வில்லை. 2019 பெப்ரவரி 26 திகதி வருமான பரிசோதகரினால் பல்வேறு தொலைபேசி கம்பனிகளுக்கு சொந்தமான 06 செலுத்துகை டவர்கள் நிறுவப் பட்டிருந்தன என அறிவித்திருந்த போதிலும் அவற்றில் இருந்து மீளாய்வாண்டிற்காக ரூபா 18,000 இற்கான கட்டணம் ஒன்று அறவிட்டிருக்கவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2016 ஜூலை 27 திகதிய பீ.எல்/7/8/36 கொண்ட மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் கடிதத்தின் குறிப்பிட் டுள்ளவாறு நடவடிக்கை எடுத்துள்ளேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| (i) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 08 வெற்றிடங் களை நிரப்புவதற்கும், 19 மிகை பதவியணியினை முறைப்படுத்துவதற்கும் மீளாய் வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | பதவியணியின் மிகை பதவி களை முறைப் படுத்துவதும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் வேண்டியுள்ளது. | வெற்றிடங்கள் நிரப்புவதற் கும் மிகை பதவியணியை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | (ii) இலக்கம் G/SP/1/1/3-17 மற்றும் 2018 ஆகஸ்ட் 08 திகதிய தென் மாகாண ஆளுனர் செயலாளரின் கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கியிருந்த சுகாதார தொழிலாளர் பதவி ஒன்றில் மற்றும் வெளிக்கள வேலை தொழிலாளர்கள் பதவி ஒன்றில் இரண் வெற்றிடங்களை நிரப்பு வதற்காக 2018 ஆகஸ்ட் 18 திகதி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருந்த போதிலும் 2019 பெப்ரவரி 28 திகதி வரை அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அந்த வெற்றிடங்கள் இரண்டையும் எதிர்காலத்தில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | குறிப்பிட்ட கடமைகள் சாட்டப் படாமல் வெளிக்கள வேலை தொழிலாளர்கள் மூவர் மற்றும் சுகாதாரத் தொழிலாளர் ஒருவர் அலுவலகத்தில் சேவைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் மக்கள் நலன்புரி மற்றும் சுகாதார அலுவல்கள் பாதை பராமரிப்பு அலுவல்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் மாத்திரம் சபை நிதியத்திலி ருந்து ரூபா 1,527,618 இற்கான தொகை சம்பளங்கள் மற்றும் படிகள் என செலுத்தப்பட்டிருந்தது. | உரிய கடமை களில் ஈடுபடுத்த வேண்டும். | சேவையின் தேவையின் மீது பிரதேச சபை சட்டத்தினால் தலைவருக்கு வழங்கியுள்ள அதிகாரத்தின் பிரகாரம் குறிப்பிட்ட பதிவுகளுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப் பட்டதுடன் அவர்களுக்கு எழுத்துமூலமாக கடமைகள் சாட்டப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். |
| (இ) | நிரந்தர சுகாதார மற்றும் பாதை தொழிலாளர்கள் இருவர் மற்றும் பிரதியீட்டு வெளிக்கள வேலை தொழிலாளர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது பிரதியீட்டு அடிப்படையில் சுகாதார மற்றும் பாதை தொழிலாளர்கள் எட்டு பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். சேர்க்கப் பட்டிருந்த ஒரு சுகாதார ஊழியர் அலுவலக வேலைகளில் சேவையில் ஈடுபட்டிருந்தார். | உரிய கடமை களில் ஈடுபடுத்த வேண்டும். | அலுவலகத்தில் மற்றும் வெளியே கட்டாயமாக அலுவல்களுக்காக ஊழியர் கள் சேர்ப்பதற்கு தேவைப் பட்டமையினால் அங்கீகாரம் ஒன்றினைப் பெற்று இணைக்கப்பட்டிருந்தனர். |

(ஈ) **பதவியணிக் கடன்**

| | | |
|---|---|---|
| பதவியணி கடன்பதிவேட்டின் பிரகாரம் 2011 ஆண்டு முதல் தவணைப் பணம் செலுத்துவதை புறக்கணித்திருந்த ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன்மீதி ரூபா 10,717 தொகையாகும். | விரைவாக நிலுவைக் கடன் மீதியை அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிட்டுள்ள 392/07 ஆம் இலக்க 1986 மார்ச் 16 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் துணைப் பகிர்வு மேற்கொண்ட 9 ஏக்கர் 1 ரூட் 35.26 பர்சஸ் (வீதிகள் இன்றி) இற்கான விதைக்கும் பரப்பை கொண்ட காணியில் சபைக்கு உரித்தாக்கப்பட வேண்டிய 03 ரூட் 31.526 பர்சஸ் கொண்ட காணிப் பகுதிக்கு பதிலாக 68.29 பர்சஸ் மாத்திரம் சபைக்கு கிடைத்திருந்தது. | வர்த்தமானியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இந்தக் காணியில் இருந்து பொது அலுவல்களுக்காக உரித்தாக்கப்பட வேண்டிய மொத்த காணியில் 10% தொகையில் மீதியாகவுள்ள காணிப்பகுதி சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி எனது இலக்கம் தெவி/பிச/ச.அ/2019 ஆம் இலக்க 2019 மே 21 திகதிய கடிதத்தினை உரிய கம்பனிக்கு அனுப்புவதற்காக நடவடிக்கை எடுத்துள்ளேன். |
| (ஆ) | தெவிநுவர கபுகமவில் அமைந்துள்ள மெகொடஹேன என்ற காணியில் பகிர்ந்து ஒதுக்கப்பட்ட 15.33 பர்சஸ் இற்கான 34 ஆம் இலக்க காணித் துண்டு 2004 ஜூன் 21 ஆம் திததிய சாட்டுதல் பத்திரத்தின் மூலம் சபைக்கு வழங்கியிருந்ததுடன், தலைவரினால் 2006 பெப்ரவரி 13 திகதிய இலக்கம் 10980 இலக்க விற்பனை பத்திரத்தின் மூலம் வெளித்தரப்பினர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. | உரிய நடவடிக்கை விரைவாக எடுத்து காணியை சபைக்கு உரித்தாக்க வேண்டும். | இந்த காணியின் உரிமையை மீண்டும் தெவிநுவர பிரதேச சபைக்கு பெற்றுக்கொள்வதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக கோவை ஒன்று தயாரிக்கப்பட்டு பிரதேச சபையின் வழக்கு அலுவல்கள் மேற்கொள்ளும் சட்ட வரைஞருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டின் தெவிநுவர எஸல விற்பனை நிலையங்களுக்காக தற்காலிக கடைகள் மற்றும் தரைத் துண்டுகள் வழங்கும் போது உரிய நடைமுறையினை கடைபிடிக்காமையினால் சபைக்கு ரூபா 4,016,300 இற்கான இலாபம் ஒன்றினை இழக்க நேரிட்டிருந்தது. | டென்டர் கோரப்பட்டு வாடகைக்கு கொடுக்க வேண்டும். | சில இடங்களில் தரை அமைந்துள்ள அமைப்பின் படி கடைகள் விற்பனை செய்வதற்கு முடியாதிருந்த துடன் சில வியாபாரிகள் தனது வர்த்தக நிலையத்திற்கு அண்மையில் உள்ள டென்டர் மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | | | பெற்றிருக்காத கடைகளில் வியாபாரப் பொருட்களை வைத்து இருந்தனர். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மார்ச் 19 திகதிய த.பா.ச/15 ஆம் இலக்க தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுரை கடிதத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான அனைத்து ஆதனங் களுக்கும் வேலி எல்லைகள் போட்டு அதற்கு அங்கீகாரம் இன்றி உட்புக முடியாதவாறு பேணுவத ற்கும் மற்றும் சிக்கல் தன்மை நிலைமையுள்ள காணிகளை மீண்டும் அளவை செய்து எல்லைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிவுரைக் கடிதத்தின் படி செயற்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான அனைத்து ஆதனங்களினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்து வதற்காக 2019 ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் பணம் ஒதுக்கப் பட்டிருப்பதுடன் அடுத்த ஆண்டின் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | பொது அலுவல்களுக்காக சபைக்கு உரித்தாக்கியிருந்த மிரிஸ்வத்த என்ற 68.29 பர்சஸ் அளவான காணியின் பகுதி ஒன்றில் இரண்டு ஆட்களினால் இரண்டு வீடுகள் அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப் பட்டு காணப்பட்டதுடன் சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பிழையாக பயன்படுத்துவது தொடர்பாக மற்றும் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரமற்ற வதிவோரை அகற்ற வேண்டும். | சபையின் அங்கீகாரத்தை பெற்று குறிப்பிட்ட அங்கீகாரமற்ற வதிவோருக்கு அறிவிக்கப்பட்டு தரைவரி ஒன்று அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.5.2 சொத்துக்களின் இருந்து பெறவேண்டிய வருமானத்தை அறவீடு செய்யாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான அபரெக்க உப அலுவலகத்தின் ஒருபகுதி 2011 ஜனவரி 06 ஆம் திகதி மாதாந்த சபைக் கூட்ட இலக்கம் 03:01 இன் கீழ் 2011 ஜனவரி 15 ஆம் திகதி முதல் ரூபா 3,000 இற்கான மாதாந்த வாடகையின் அடிப்படை யில் பலநோக்கு கூட்டுறவு சங்கம் ஒன்றிற்காக வழங்கியிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரை வாடகை ஏதும் அறவிடப்பட்டி ருக்கவில்லை. இந்த அலுவலக பகுதியில் கிராமிய வங்கி ஒன்று நடாத்தப்பட்டு வருவதாக 2019 பெப்ரவரி 25 திகதிய வெளிக்கள கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் தொழிநுட்ப உத்தியோகத்தர்களினால் திட்டமொன்று தயாரிப்பதற்கும் உடன்படிக்கை மேற்கொள் வதற்கும் பிரதான பெறுமதி மதிப்பீட்டாளருக்கு அறிவிக்கப்பட டுள்ளதுடன் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை ஒன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2014 ஆண்டின் போது ஜே.சீ.பீ. இயந்திரம் வாடகைக்கு கொடுத்ததன் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா 147,000 இற்கான தொகை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக 2019 ஏப்ரல் 30 திகதியில் கௌரவ ஆளுனர் வழங்கிய அறிவுரையின் பிரகாரம் செயற்படுகின்றேன். |

**3.5.3 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **காணிகள் மற்றும் கட்டிடங்கள்** | | |
| | சபைக்குச் சொந்தமான 04 ஏக்கர் 02 ரூட் 05 பர்சஸ் கொண்ட 07 காணித் துண்டுகள் மற்றும் அளவை செய்யப்படாத காணி யொன்றும் பயன்தரு கருமமொன் றுக்கு ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | பயன்தரு கருமங்களுக்கு ஈடுபடுத்த வேண்டும். | சபைக்குச் சொந்தமான 4 ஏக்கர் 85 பர்சஸ் காணியினை இனங்கண்டு அளவை செய்து பயன்தரு கருமங்களுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | **மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள்**<br>-------------------------------------------------------<br>சபைக்குச் சொந்தமான ரூபா 662,000 தொகை பெறுமதியான டிரக்டர், பெறுமதி குறிப்பிடப்படாத 02 கைடிரக்டர்கள் ஒரு வருடத்தை விட மிகையான காலம் முதல் விளைவற்று காணப்பட்டது, இது தொடர்பாக 2015 ஜுன் 10 திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |

**3.6 கருத்து முரண்பாட்டு தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 மார்ச் 11 திகதி சபைக்கு கிடைத்திருந்த மாகாண இயந்திர பொறியியலாளரினால் குறைந்த பெறுமதி ரூபா 300,000 என பெறுமதி மதிப்பீடு செய்திருந்த முச்சக்கர வண்டி ஒன்று கடந்த ஆண்டு ரூபா 20,400 இற்கு ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்தது. 2016 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டின் படி இவ் வண்டி திருத்துவதற்கு அல்லது அப்புறப் படுத்துவதற்கான விதப்புரைகள் ஏதும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணை ஒன்று மேற் கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முச்சக்கர வண்டி ஓட்ட நிலையில் காணப்படாமையால் வண்டியை திருத்துவதா அல்லது அப்புறப்படுத்துவதா என இயந்திர பொறியியலாளரிடம் அறிக்கை ஒன்று பெற்றிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 177 இன் பிரகாரம் சபையின் ஆதனங்களை டென்டர் மூலம் வாடகைக்கு கொடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் மீளாய்வாண்டு தெவிநுவர எஸல சந்தைக்காக 919 கடைகள் மற்றும் நிலத்துண்டுகள் டென்டர் பண்ணாமல் வழங்கப்பட்டிருந்தது. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2016 ஆண்டின் போது டென்டர் நடைமுறையின் மூலம் கடை களை விற்பனை செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்த போதிலும் பிரதேச மக்களால் தெரிவித்திருந்த கருத்துக்களின் படி முதலமைச்சரினால் அந்த கேள்வி டென்டர் நடைமுறை க்கு புறம்பாக இது வரை மேற்கொள்ளப்பட்ட முறையில் கடைகளை கொடுக்கும் படி அறிவித்திருந்தமையினால் ஏனைய ஆண்டுகளில் நடை பெற்றது போலவே டென்டர் பண்ணாமல் வியாபாரிகளுக்கு கடைகளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேன். |

## 3.7 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பல்வேறு நிதியங்களின் கீழ் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட 04 பாதைகளை கொங்கிரீட்ட பண்ணும் போது குறிப்பிட்ட அளவில் கொங்கிரீட் போடப்படாமையால் ரூபா 46,656 தொகை மிகையாகச் செலுத்தப் பட்டிருந்தது. | மிகையாக செலுத்தியிருந்த தொகையை விரைவாக அறவிடப்பட வேண்டும். | 4 பாதைகளுக்காக மிகையாக செலுத்தியிருந்த தொகையை குறிப்பிட்ட நிர்மாண வேலை களின் பிடி பணத்தில் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 செலவு விடயங்களில் சேமிப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 24,759,353 தொகையாகக் காணப்பட்டதுடன், அப்பெறுமதிகள் 22 சதவீதம் முதல் 148 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமாக வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் பாதீட்டு, உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளை பயன்தரும் விதத்தில் முகாமைத்துவம் செய்து உரிய முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 03 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 14,276,148 தொகையாக இருந்ததுடன், அப்பெறுமதிகள் 02 சதவீதம் முதல் 359 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமாக வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் பாதீட்டு, உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளை பயன்தரும் விதத்தில் முகாமைத்துவம் செய்து உரிய முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |